


இலக்கணம் - வலிமிகா இடங்கள்
'படி' சேர்ந்துவரும் சொல்லுக்குப்பின் வலிமிகா.
படி
கேட்கும்படி + சொன்னார் :
கேட்கும்படி சொன்னார்
அமரும்படி + பணித்தார் :
அமரும்படி பணித்தார்
அமரும்படிப் பணித்தார்
கேட்கும்படிச் சொன்னார்
தவறு
X


மேலும் சில உதாரணங்களைக் காண்போம்...
தணியும்படி + பேசினான் = தணியும்படி பேசினான்
வெட்கும்படி + செய்தான் = வெட்கும்படி செய்தான்
நிற்கும்படி + கூறினான் = நிற்கும்படி கூறினான்

## நடவடிக்கை 1

வலிமிகாமல் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1 | தரும்படி + பணித்தார் = | 12 | தேடும்படி + பணித்தார் |
| 2 | வாங்கும்படி + சொன்னார் = | 13 | மகிழும்படி + கூறினார் |
| 3 | மூடும்படி + கூறினாள் = | 14 | கேட்கும்படி + பாடினாள் |
| 4 | உதிரும்படி + தட்டினாள் = | 15 | ஓடும்படி + பணித்தார் |
| 5 | எழும்படி + பணித்தார் = | 16 | பறிக்கும்படி + சொன்னார் |
| 6 | மறக்கும்படி + கெஞ்சினான் = | 17 | விழும்படி + செய்தான் |
| 7 | சிரிக்கும்படி + பேசினான் = | 18 | வெளுக்கும்படி + துவைத்தாள் |
| 8 | உறங்கும்படி + தாலாட்டினாள் = | 19 | இரசிக்கும்படி + பாடினார் |
| 9 | வரையும்படி + பணித்தார் = | 20 | உண்ணும்படி + கூறினார் |
| 10 | நிறுத்தும்படி + சொன்னான் = | 21 | பறக்கும்படி + செய்தார் |
| 11 | ஆடும்படி + சொன்னாள் = | 22 | திறக்கும்படி + பணித்தாள் |

**சரியான விடையைத் தேர்வு செயக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | | 12. | |
| 2. | | 13. | |
| 3. | | 14. | |
| 4. | | 15. | |
| 5. | | 16. | |
| 6. | | 17. | |
| 7. | | 18. | |
| 8. | | 19. | |
| 9. | | 20 | |
| 10. | | 21. | |
| 11. | | 22. | |

வாக்கியங்களில் சரியாக வலிமிகுந்துள்ள சொற்றொடர்களைத் தேர்வு செய்க.

1. காடுகளைக் கட்டுபாடின்றி அழிப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கும்படி + கோரி புதிய சுற்றறிக்கை ஒன்றைச் சுற்றுச்சூழல் அமைச்சு அண்மையில் வெளியிட்டது.

2. நமது நாட்டின் ஒற்றுமையையும் அமைதியையும் எந்நேரமும் பேணும்படி + கேட்டு பிரதமர் துன் டாக்டர் மகாதீர் அவர்கள் தமதுரையை நிறைவு செய்தார்.

3. கல்வியில் மாணவர்களின் கவனம் குறையும்படி + செய்யும் திறன் பேசிகளின் பயன்பாட்டைப் பெற்றோர்கள் கட்டுப்பாட்டில் வைப்பது சிறப்பாகும்.

4. 'செல்லினம்' எனும் பெயரில் கணினித் தமிழை உலகெங்கும் உள்ள தமிழ் ஆர்வலர்களின் இல்லங்களுக்கும் இதயங்களுக்கும் கொண்டு சென்று, யாவரும் பெருமைப்படும்படி + செய்துள்ளார் முரசு மென்பொருளின் உருவாக்குநரான முத்து நெடுமாறன் அவர்கள்.